1541

Regd. No. M. 2475. JULY, 1930. Vol. V—No. 7.




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை

ஆபீஸ்: மைலாப்பூர்: மதருஸ்.

பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 36. | பாரெஸ்டு பஞ்சாயத்தார்களுக்கு அறிக்கை | 91 |
| 37. | பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு மற்றொரு வெகு முக்கியமான அவஸர அறிக்கை. | 92 |
| 38. | பாரெஸ்டு பஞ்சாயத்துகள் | 93 |
| 39. | நெல் வயல்களின் வரப்புகளில் வளர்கிற விசுவாமித்ர புல்லை எப்படி அழிப்பது? | 97 |
| 40. | Correspondence | 98 |
| 41. | பாரெஸ்டு பஞ்சாயத்தார்களுக்கு வெகு அவசர அறிக்கை | 99 |
| 42. | சென்னை கிராம பஞ்சாயத்து புல்லடின் | 100 |


வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி அணா 6.

எடிடர் & மானேஜர்:
ஏ. சுவாமினாதய்யர் பி. ஏ.

ஆச்சரியமுள்ளது !                                                                 அதிசயிக்கத்தக்கது !!

# தாது புஷ்டிக்குத் தங்க ரேக்கை

சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தில் சாப்பிடுங்கள்.

தாது புஷ்டிக்கு நிகரான வேறு மருந்து ஒன்றுமேயில்லை. இதை காலை மாலை நோய் பலம் போல் ஒன்றிரண்டு மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தைக் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்யும். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து பால்யம், யௌவனம், விருத்தாப்யம், இந்த பருவங்களில் அடைய வேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யவும், கிழத்தனத்தை நீக்கி வல்லமை அடையச் செய்வதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. நீரழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல் கஷ்ட சுவாசம், கோழை, கடைக்கட்டு சூலை, கிரந்தி முதலிய சகல கர்ம வியாதிகளும் நீக்கும். பத்தியமில்லை. 100-நாளைக்கு தங்க ரேக்கும், சித்தானந்த சிட்டுக்குருவி லேகியமும் ரூபா 100. 50 நாளைக்கு ரூபா 50, 25 நாளைக்கு ரூபா 25. சிங்கப்பூர், பினாங்கு F. M. S வாசிகள் சார்ஜு ரூபாய் 2 சேர்த்து முன்பணம் அனுப்பவும். அல்லது அட்வான்சு ரூபா 5 அனுப்பவும்.

காருண்ய கவர்மெண்டாரால் பரீக்ஷிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க வெள்ளி பதக்கங்களும் பரிசு பெற்றது.

# சித்தானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த அருமையான வீர தத்துவ லேகியத்தை உபயோகித்து இழந்த வீரிய தத்துவத்தையும், ஆண் சிங்கத்திற்கு ஒப்பான தேக பலத்தையும, மின்னாள் இன்பத்தையும், புருஷ கெம்பீரத்தையும், எழுவகை தாதுக்களின் திடத்தையும் உலக இல்லற வாழ்க்கையின் அநுகூலத்தையும் பெற வில்லை என்று ருஜுப்படுத்தும் கனவான்களுக்கு எங்கள் மருந்து சாலையிலிருந்து ரூபா 5000 வெகுமதி அளிக்கப்படும்.

மேலே சொல்லும் 5000. ரூபா வெகுமதிக்காக 14-8-20-ல் எங்கள் பேரால் கிரயமானதும், தற்காலம் ரூபா பதினாயிரம் மதிப்புள்ளதும், கவர்மெண்டின் சட்டப் படி 10 ரூபா ஸ்டாம்பின் பேரில் எழுதி சர்க்கார் டாக்ஸாத்தில் 933-குழி விஸ்தீரண நஞ்சை வரைராக்களை 20-9-20-ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொத்தை ஜாமீனாக வைத்து இருக்கிறோம். ஆனதால், கனவான்களே ! சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தை ஒரு முறை பரிசோதித்துப் பாருங்கள்.

ஜெயம் பெறுவீர்கள் !                    உள்ளபடி                    ஜெயம் பெறுவீர்கள் !!

இதன் கிரயம்                    [எவ்வித பத்தியமுமில்லை]

| | | |
|---|---|---|
| 96 வேளை 48 நாள் லேகிய டப்பி விலை ரூபா | ... ... | 15-0-0. |
| 48 வேளை 24 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா | ... ... | 8 0-0. |
| 24 வேளை 12 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா | ... ... | 4-4-0. |

சவுத் ஆப்ரிக்கா, டிரான்சிவால், சுமத்ரு, ஜாவா, சிலப்பீஸ், கொச்சின் சீனா, பிஜி முதலிய வெளி நாட்டு ஆர்டர்கள் பார்சல செலவுக்கு ரூபா 2 சேர்த்து முன் பணம் அனுப்பவும்.

# தாம்ரை லிங்கத் தைலம்.

கனவான்களே ! இந்த அருமையான தைலத்தை மூன்று தடவை போதுமளவு எடுத்து தளர்ந்து சோர்வடைந்த நருளிகளின் மீது தேய்த்த உடன் தாங்கள் இது வரை பாராத ஆச்சரியத்தை தரும்படியான களிகளைப் பெருகச் செய்து நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாகுமென்பது நிச்சயம்.

1 அவுன்ஸ் தகர பாட்டில் விலை ரூ. 1 வி. பி. பாக்கிங் செலவு பிரத்தியேகம்.

எங்கள் விலாசம்:— **ஸாஹேபியா மருந்துசாலை,**

**நெ. 146, பிராட்வே, சென்னை**

ஆர்டர் செய்யும்போது பத்திரிகை பேரைக் குறிப்பிடவும். கேட்லாக் இனாம்.

## ஸூராஜ்மல் கம்பெனியாருடைய
## வெள்ளி சாமான்கள்

# எல்லோருக்கும் திருப்தியை கொடுக்கும்.

நம்முடைய வெள்ளி சாமான்கள் சில பேருக்கு மாத்திரம் திருப்தி அளிப்பவை அல்ல. ஸகலமானவர்களுக்கும் தேவை யானவை. மிகவும் அதிகமாகவும், நேர்த்தியாகவும் அவை தயாரிக்கப் படுவ தால் வெகு ஸரஸமான விலைக்கு விற்கக் கூடும்.

ஸாமான்கள் வெகுநாளைக்கு உப யோகப்படுவதால் சிக்கனமானவையே. நீங்கள் கஷ்டப்படும்போதும்: ஸுகப் படும்போதும் அவை உங்களுக்குப் பய னளிப்பவை.

## ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கோ,

வைர, ரத்ன வெள்ளி தங்க வியாபாரிகள்.

313, எஸ்பிளனேட் மதராஸ்.

ராக் போர்ட்டு கேட் : திருச்சி.

199395




எங்களிடம் ஒரு பாலிஸி எடுங்கள்.

## யுனைடெட் நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்:

ஹெட் ஆபீஸ்: கராச்சி.

---

### சுகாதார பாடங்கள்.

I, II, IIIவது பாரங்களுக்கு (விலை முறையே, 6 அணா, 4 அணா, 6 அணா) வீரவ நல்லூர், ஸெகண்டரி பாடசாலை ஆசிரியர் எம். எஸ். சுப்பிரமணியன் எழுதியவை.

தமிழ்நாடு "சிறு சிறு பாடங்களாக பல படங்களுடன் ஆசிரியர் சுகாதார முறைகளைத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்"

ஆரோக்கிய தீபிகை "சுலப நடையில் சிறுவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளும் படி எழுதப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு எலிமெண்டரி பாடசாலைகளிலும் இவைகளைப் பாடப் புத்தகங்களாக வைப்பார்களென்று நம்புகிறோம்".

ஊழியன் "பள்ளி மாணவர் மட்டுமன்று; பிறரும் படித்துப் பெரும் பயனடையத் தக்கவை".

புத்தக்ங்கள் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மைலாப்பூர், மாரி செட்டி வீதி 2 நெ. வீடு

K. S. M. சர்மா விடமும் கிடைக்கும்.

# SADHANA AUSADHALAYA

## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும், வேண்டுவோருககு விலைப்பட்டி இனாமாக அனுப்பப் படும். வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனாமாக மருந்து பட்டி அனுப்பப் படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்.)

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து: பித்தம், வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0.

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்பப்பை வியாதி, அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5.

## பஞ்சாயத்து லைப்ரெரிகளுக்கு முக்கியமான நவீன முறை புஸ்தகங்கள் !

நாவல்கள், நாடகங்கள் புராணங்களைவிட மேலானது!!

### கூட்டுறவு.

| | | | |
|---|---|---|---|
| கூட்டுறவு முதல் நூல்—காஜிபால், 1929 | 0 | 8 | 0 |
| கூட்டுறவு, ஓர் நாடகம்—நாராயணசாமி அய்யரால் 1929 | 0 | 2 | 6 |
| கூட்டுறவு விளக்கம்—நாராயணசாமி அய்யரால் 1930 | 0 | 8 | 0 |
| கூட்டுறவு, கிராம சங்கம்—ஓர் நாடகம், ராஜகோபாலய்யரால் 1929 | 0 | 8 | 0 |
| இந்தியாவின் கூட்டுறவு முயற்சி—1914-ம் வருஷத்திய இந்திய துரைத்தனத்தாரின் தீர்மானம்—நாராயணசாமி அய்யரால், 1929 | 0 | 8 | 0 |
| தொழிலாளர் கூட்டுறவு- (ஒரு சிறிய நாடகம்) 1930 | 0 | 3 | 0 |
| மாக்கலகான் கமிட்டி ரிப்போர்ட்டு 1930 | 0 | 12 | 0 |

### ஜீவனோபாய முறை.

| | | | |
|---|---|---|---|
| இந்திய கிராம ஜீவனோபாய முறை—எஸ். கேசவய்யங்கார் ஆங்கிலத்தில் எழுதிய புஸ்தகத்தின் தமிழ் மொழிப் பெயர்ப்பு, 1930 | 5 | 0 | 0 |

### கிராம பஞ்சாயத்து.

| | | | |
|---|---|---|---|
| கிராம பஞ்சாயத்துகள்—முனிஸாமி அய்யா ஆங்கிலத்தில் எழுதிய புஸ்தகத்தின் மொழி பெயர்ப்பு, 1930 | 2 | 0 | 0 |

### புக்கீப்பிங்.

| | | | |
|---|---|---|---|
| வர்த்தக கணித நூல் அல்லது தமிழ் புக்கீபிங் | 2 | 0 | 0 |

### கைத்தொழில்.

| | | | |
|---|---|---|---|
| இந்திய பருத்தி நெசவுத் தொழில்,—M. P. காந்தியின் ஆங்கில புஸ்தகத்தின் மொழி பெயர்ப்பு, 1930 | 3 | 0 | 0 |
| கைத்தொழில் முறைகள்,—1000 கைத்தொழில் முறைகளடங்கிய அருமையான நூல் | 1 | 8 | 0 |

### வியாபாரம்.

| | | | |
|---|---|---|---|
| வியாபார தந்திரம் ... ... ... | 1 | 8 | 0 |
| வர்த்தக யுக்தி ... ... ... ... | 0 | 12 | 0 |
| வர்த்தக யூகம் ... ... ... ... | 0 | 8 | 0 |
| ஹென்ரி போர்ட் அல்லது வெற்றியின் ரகசியம்—பூலோகத்தில் மோட்டார் வியாபாரத்தில் விசேஷமான வெற்றியடைந்த ஒரு அமெரிக்கரின் விநோத சரித்திரம் | 1 | 8 | 0 |

உங்கள் விலாஸம் தெரிவித்தால் எங்கள் புஸ்தக காட்லாக் அனுப்புகிறோம்.

ஸிடி புக் கம்பனி, தபால் பெட்டி 283, மதருஸ்

The City Book Co.,-Post Box 283, Madras.



# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ் : மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் V. 1930ௌ ஜுலை . நெ. 7.


## பாரெஸ்டு பஞ்சாயத்தார்களுக்கு அறிக்கை.

அடுத்த பாரெஸ்டு பஞ்சாயத்தார் வருஷாந்தர மஹா நாடு சென்னையில் 1930ௌ ஸெப்டம்பர்ீ 21௳ நடைபெற வேண்டியதாகத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. எல்லா மஹா நாடுகளையும் விட இந்த மஹா நாடு வெகு முக்கியமானது. ஆகவே, அதிகச் செலவு ஏற்படும். பஞ்சாயத்துக்கள் டொனேஷன்களை உடனே அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இனி தாமஸமேற்பட்டால் ஏற்பாடுகளுக்குப் பணக் கஷ்டமுண்டாகும். பெரிய பஞ்சாயத்துகள் 10 ரூபாய்க்குக் குறையாமலும் சின்ன பஞ்சாயத்துகள் 5 ரூபாய்க்குக் குறையாமலும் உடனே டொனேஷன்களை அனுப்ப வேண்டுமென்று வணக்கமாய்க் கோருகிறேன். இந்த அறிக்கையைக் கண்டதும் பஞ்சாயத்துகள் டொனேஷன்களை அடியில் கண்ட விலாஸத்திற்கு மணியார்டர் செய்வார்களென்று நம்புகிறேன்.


எ. இராஜகோபால ரெட்டி,

பிரஸிடெண்டு, பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்,

பாலவாக்கம், ஊத்துக்கோட்டை போஸ்டு செங்கல்பட்டு ஜில்லா. 30-8-30.

# பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு மற்றொரு வெகு முக்கியமான அவசர அறிக்கை.

பாரெஸ்டு பஞ்சாயத்துகள் "ரூரல் இந்தியா" பத்திரிகைச் சந்தாவை செலுத்தாமல் வைத்துக் கொண்டிருப்பதினால் யூனியனின் சிலவுகளுக்கு வெகு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப்பொழுதும் பஞ்சாயத்துகளிடமிருந்து வர வேண்டிய சந்தா பாக்கி ஏறக்குறைய 5000 ரூபாயாக ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் பஞ்சாயத்தார்கள் நமது யூனியனின் விஷயங்களில் வைத்திருக்கும் அச்சிரத்தைதான். யூனியன் சரிவர நடக்க வேண்டுமென்கிற நோக்கம் அவர்களுக்கு இருந்தால் அவர்கள் இவ்வித அச்சிரத்தையை வஹிப்பார்களா? ரூரல் இந்தியா சந்தாப் பணம் பாக்கியில்லாமல் செலுத்தப்பட்டிருந்தால் யூனியன் ஆபீசு சிலவுகளுக்கும் பத்திரிகை அச்சுச் சிலவுகளுக்கும் யாதொரு கஷ்டமும் இருந்திராது. மேலும், டிபாஸிட்டுகளுக்கு நல்ல வட்டியும் கொடுக்கப் பட்டிருக்கும். பிரஸிடெண்டும், டைரெக்டர்களும், பத்திராசிரியரும் அவருடைய உதவி ஊழியர்களும் சிப்பந்திகளும் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தாலும் பிரயோஜனமில்லாமல் போகிறது. அவர்களுடைய உழைப்போடு பஞ்சாயத்தார்களும் தங்களுடைய சிரத்தையைக்காட்டி வந்து உழைத்து சந்தாத் தொகைகளை பாக்கி இல்லாமல் செலுத்தினால்தான் யூனியனும் பத்திரிகையும் ஸரிவர நடக்கும். ஆகையால் இனியாவது இவ்வறிக்கையைப் பார்த்தவுடனேயாவது பஞ்சாயத்தார்கள் சந்தா பாக்கித் தொகைகளைப் பூராவும் மணி ஆர்டர் செய்து விட்டு என்னுடைய வேண்டுகோளுக்கு மதிப்பை வைப்பார்களென்று நம்புகிறேன். சந்தாத் தொகைகளை இன்னமும் பஞ்சாயத்தார்கள் நிறுத்தி வைத்துக்கொண்டால் எவ்வித கஷ்டங்கள்தான் வருமென்று சொல்ல முடியாது. ஆகவே பஞ்சாயத்தார்கள் அவைகளை அடியில் கண்ட விலாஸத்துக்கே உடனே மணியார்டர் செய்ய வேண்டுமென்று ரொம்பவும் வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

ஏ. இராஜகோபால ரெட்டி.

பிரஸிடெண்டு பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்,
பாலவாக்கம், ஊத்துக்கோட்டை போஸ்டு, செங்கல்பட்டு ஜில்லா. 30-8-30



# பாரெஸ்டு பஞ்சாயத்துகள்.

(81-ம் பக்கத்திலிருந்து தொடரப்பட்டது.)

## VII

கடைசியாக, பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களின் குறைகளை எடுத்துக் காட்டுவோம். அவர்கள் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளை நிர்வாஹஞ்செய்கிறவரையில் எக்கஷ்டங்களை அநுபவிக்கிறார்களென்றும் கூறுவோம். பிரதி வருஷாந்தர மஹாநாட்டிலும் மேற்கூறிய குறைகளின் சம்பந்தமாக தீர்மானங்கள் கைக்கொள்ளப்பட்டு கவர்மெண்டுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. மேற்கூறிய மஹாநாடுகளில் தீர்மானங்களில் முக்கியமானவை (1) பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு சட்டபூர்வமான அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டுமென்பதும், (2) பஞ்சாயத்துகளுக்குக் குற்றங்களைக் கம்பவுண்டு செய்கிற அதிகாரம் கொடுக்கப்பட வேண்டு மென்பதும், கம்பவுண்டிங்கு பணங்கள் பஞ்சாயத்துகளுக்குச் சேரவேண்டு மென்பதும், (3) அக்ரீமெண்டுகளில் குறிக்கப்பட்ட கவ் யூனிட்களுக்கு மேல்பட்டுக் கால்நடைகள் மேய்க்கப்பட்டால் அதிகமேய்ச்சல் வசூல் பணங்கள் பஞ்சாயத்துகளுக்கே பஞ்சாயத்துக்காடுகளின் அபிவிருத்தி நிமித்தம் கொடுக்கப்பட வேண்டுமென்பதும்.

மேற்கூறிய விஷயங்களில் அடையப்பட்ட தீர்மானங்கள் தவிர இன்னும் சிற்சில விஷயங்களிலும் தீர்மானங்கள் கைக்கொள்ளப்பட்டன. அவையாவன:—(1) பஞ்சாயத்துகள் கவர்மெண்டுக்குச் செலுத்தும் தீர்வை வெகு அதிகமாக விருக்கிறபடியால், பஞ்சாயத்து காடுகளின் அபிவிருத்தி நிமித்தமாக அவைகள் சிலவிடும் தொகைகள் இத்தீர்வைத் தொகைகளிலிருந்து கழித்து தள்ளிக்கொடுக்கப்பட வேண்டுமென்பதும், (2) பஞ்சாயத்தார்களால் காடுகளின் காவல் நிமித்தமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் காவலாளிகள் பாரெஸ்டு ஆபீசர்களாக பாவிக்கப்பட வேண்டு மென்பதும், (3) எல்லாக் காடுகளும் மறுபடியும் தரம் பிரிக்கப்பட்டு ஏற்கனவே நான்காவது வகுப்பாக உள்ள விஸ்தீரணங்களும் கிராமங்களுக்கும் பயிர் பூமிகளுக்கும் ஒட்டினப்போல் இருக்கும் விஸ்தீரணங்களும் "லோகல் பாரெஸ்டு" களில் சேர்க்கப்படவேண்டுமென்பதும், (4) எந்தெந்த வருஷத்தில் பஞ்சாயத்துக் காடுகளில் சரியான வரும்படி வருகிறதில்லையோ அவவருஷங்களில் தீர்வைகள் தள்ளிக்கொடுக்கப்பட வேண்டுமென்பதும், (5) அக்ரீமெண்டுகள் சுதேசபாஷைகளில் பஞ்சாயத்துகளுக்குத் தர்ஜமாசெய்து கொடுக்கப்பட வேண்டுமென்பதும், (6) பஞ்சாயத்து விஸ்தீரணங்களில் உள்ளஸ்தலங்கள் பஞ்சாயத்துகளின் அநுமதியில்லாமல் தற்காஸ்து செய்யப்படக் கூடாதென்பதும், (7) பாரெஸ்டு டிபார்டுமெண்டார் தங்களிடத்திலுள்ள விதைகளையும் நாத்துகளையும் பஞ்சாயத்துகளுக்கு இலவசமாய்க் கொடுக்கவேண்டு மென்பதும், (8) பாரெஸ்டு

டிபார்டுமெண்டாரால் வசூலிக்கப்பட்ட மேய்ச்சல் கட்டண விகிதங்களைவிட பஞ்சாயத்து காட்டுமேய்ச்சல் விகிதங்கள் அதிகமாக விருக்கின்றனவாதலால் பஞ்சாயத்துக் காட்டு விகிதங்கள் குறைக்கப்பட வேண்டுமென்பதும்.

2. (1) பஞ்சாயத்துகளுக்கு சட்டபூர்வமான அந்தஸ்து கொடுக்கப்படவேண்டிய விஷயம், 1912-ம் வருஷத்திய பாரெஸ்டு கமிட்டியார் தங்களுடைய ரிபோர்டில் சொன்னதாவது: "தற்போது பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் அந்தஸ்து சம்மந்தமாக சட்டமேற்பட வேண்டுமென்பது அவ்வளவு அவசியமாக தோன்றவில்லை; ஆனபோதிலும் நாளளவில் அவ்வித அந்தஸ்து வேண்டியிருப்பது அவசியமாகவு மிருக்கலாம்." சென்னை சட்டசபையில் 1926ம் வருஷம் ஜூன்மாதத்தில் கேள்விக்குப் பதிலளிக்கையில் கவர்மெண்டார் பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு சட்டபூர்வமான அந்தஸ்துக்கொடுக்கிற விஷயம் தங்களுடைய ஆலோசனையில் இருந்ததென்று மொழிந்தார்கள். கவர்மெண்டார் அதுசம்மந்தமாக என்ன தீர்மானத்தை யடைந்தார்களென்று தெரியவில்லை, ஆனால், இப்பொழுது பாரெஸ்டு பஞ்சாயத்துகள் டிப்டி தாசில்தார்களால் நிர்மாணிக்கப்படுகின்றன; எலக்ஷன்களில் மாட்டுச்சொந்தக்காரர்கள்தான் வாக்காளர்கள். இவ்விதமாக ஏற்படுத்தப்படும் பஞ்சாயத்துகள் மேய்ச்சல் கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டியிருக்கின்றன; காவலாளிகளுக்குச் சம்பளம் கொடுக்கப்படவேண்டி யிருக்கிறது; காட்டு அபிவிருத்தி முயற்சிகள் நடத்தப்படவேண்டி யிருக்கின்றன. பஞ்சாயத்துகளுக்கு பலவிதக் கடமைகளிருக்கின்றன; அவைகள் குத்தகைகளை ஏற்றுக்கொண்டு வேலைசெய்யவேண்டி யிருக்கின்றன. ஆகவே, அவைகள் பலவித வியவஹார பாத்தியதைகளை வஹிக்க வேண்டி யிருக்கின்றன. இக்காரணங்களினால்தான் அவைகளின் நிமித்தமாக அவைகளின் அதிகாரங்களும் பாத்தியதைகளும் நன்றாய் நிர்ணயிக்கப்பட்ட சட்டம் ஒன்று ஏற்படவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

(2) கம்பவுண்டிங்கு கட்டணங்கள் :— சில பஞ்சாயத்துகளுக்குக் குற்றங்களைக் கம்பவுண்டு செய்கிற அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில பஞ்சாயத்துகளுக்கு அவ்வதிகாரம் கொடுக்கப்படவில்லை. அவ்வதிகாரத்தை வஹிக்கிற பஞ்சாயத்துகள் கம்பவுண்டிங்கு பணங்களைத் தாங்களே அடைகின்றன; அவ்வதிகாரத்தை வஹிக்காத பஞ்சாயத்துகளுக்கு கம்பவுண்டிங்கு பணங்கள் சேர்கிறதேயில்லை. இவ்வித்தியாஸ ஸம்பந்தமாக சட்டசபையில் 1926-ம் வருஷத்தில் ஒருகேள்வி கேட்கப் பட்டபொழுது கவர்மெண்டார் தாங்கள் அவ்விஷயத்தைக் குறித்து ஆலோசித்து வருவதாக பதிலளித்தார்கள். பஞ்சாயத்துகள் கம்பவுண்டு பணங்களை அடைந்தால் அப்பணங்கள் அவைகள் காடுகளை அபிவிருத்தி செய்கிற வழிகளில் உபயோகிக்கக்கூடும். மேலும், எல்லா பஞ்சாயத்துகளுக்கும் கம்பவுண்டிங்கு அதி



199395

காரம் கொடுக்கப்படவேண்டும். கவர்மெண்டாருக்கு இவ்வல்பத்துகைகள் வேண்டுமென்பதுமில்லை. கம்பவுண்டு துகைகள் பஞ்சாயத்துகளையே சேர வேண்டுமென்கிற ஒரு ஒழுங்கு இருக்குமாகில் பஞ்சாயத்துகள் வெகுசிரத்தையுடன் வேலைசெய்யும். எந்தஎந்த பாரெஸ்டு பஞ்சாயத்துகளில் குற்றங்களின் நிமித்தமாக டிப்டி தாசில்தார்கள் கம்பவுண்டிங்கு பீசுகளை விதிக்கிறார்களோ அப்பஞ்சாயத்துகளில் எல்லாம் டிப்டி தாசில்தார் செய்த தீர்மானங்கள் தெரியாமலே போய்விடுகின்றன.

அனேகவித கோளாறுகள் இக்காரணத்தினால் உண்டாகின்றன. சேலம் ஜில்லாவில் வாட்டணம்பட்டி பஞ்சாயத்தில் 1929-ம் வருஷம் ஏப்ரில் மாதத்தில் 84 வெள்ளாடுகள் மேய்ந்தன. வாட்டணம்பட்டி பஞ்சாயத்துக்குக் கம்பவுண்டு அதிகாரமிருப்பதால் அது டிப்டி தாசில்தாரையும் கலந்து யோசனை கேட்டு 252 ரூபாயைக் கம்பவுண்டிங்கு கட்டணமாக விதித்தது. குற்றவாளி கம்பவுண்டிங்கு பணத்தைக் கொடுக்கத்தவறியதால் கிருஷ்ணகிரி ஸப்மாஜிஸ்டிரேட் கச்சேரியில் கிரிமினல் நடவடிக்கை நடத்தப்பட்டது. கிருஷ்ணகிரி ஸப்மாஜிஸ்டிரேட் குற்றவாளியை விடுதலை செய்துவிட்டார். ஆகவே குற்றவாளி மறுபடியும் 100 வெள்ளாடுகளை மேய்த்தான். பஞ்சாயத்தின் காரியதரிசி அவைகளைக் கிட்டத்திலிருக்கிற பவுண்டுக்கு ஓட்டிக்கொண்டு போகையில் அவர் தாக்கப்பட்டார், அவர் வெகுகஷ்டத்துடன் தப்பிவந்தார். குற்றவாளி கம்பவுண்டு துகையைக் கட்டவில்லை. ஸப்மாஜிஸ்டிரேட் கோர்டில் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. பஞ்சாயத்துகளுக்கு சட்டபூர்வமான அந்தஸ்து இருக்கும்பக்ஷத்தில் அவைகள் தாங்களே தங்களுடைய தீர்மானத்தை நிறைவேற்றக்கூடும் அவைகள் வேறு கோர்ட்டுகளையும் அதிகாரிகளையும் நாடவேண்டியிருது. பஞ்சாயத்து பாரெஸ்டுகளின் அருகாமையில் பவுண்டுகள் இருக்கவும வேண்டும். பஞ்சாயததுகள் பவுண்டு கீபர்களாகவு மிருக்கவேண்டும்.

அதிக மேய்ச்சல் கட்டணங்கள் :— தற்போது அக்ரீமெண்டுகளில் கண்ட கவ்யூனிட்களுக்கு அதிகமாகக் கால்நடைகளுக்குப் பெர்மிட்கள் கொடுக்கப்பட்டால் அவ்விதமாக ஏற்படும் அதிகக்கட்டணங்கள் கவர்மெண்டாரைச் சேர்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்துக் காடுக்கும இத்தனை கௌயூனிட்டுக்குத்தான் பெர்மிட்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட காரணம் அக்காடுகள் அழிந்துபோகும படியாய் அதிகமேய்ச்சல் கூடாதென்பதுதான். காடுகள் அழியாமலிருகக வேண்டிய வகையில் கூடுமானவரையில் ஜாக்கிருதைகளை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்தான். ஆனால் அதிக வசூல்களைக் கவர்மெண்டார் ஏன் அடையவேணடும்? பஞ்சாயத்துகள்தான் அவைகளை அடையவேண்டும். அப்படி பஞ்சாயத்துகள் அடைந்தால் அவைகள் அப்பணங்களை பஞ்சாயத்துக் காட்டு அபிவிருத்தி

முயர்ச்சிகளுக்கு உபயோகிக்கக்கூடும். தவிர, சிலவித அதிகமேய்ச்சல்களின் சம்பந்தமாய் அதிகமேய்ச்சல் கட்டணங்கள் வசூலிக்கப்படக்கூடாது. சில ஊர்களில் கவ்யூனிட் லிமிட்டிற்கு மேல்பட்டு கால்நடைகள் இருக்கக்கூடும். ஒருவன் பெர்மிட் வாங்கினபின்பு புதிதாக அதிகமாடுகளை வாங்கக்கூடும். அவ்வதிகமாடுகளும ஏற்கனவே பெர்மிட்டில் கண்ட மாடுகளோடுதான் மேயப்போகும். அவைகளின் நிமித்தம் பெர்மிட்கள் கொடுபடாமல் போனால் மாட்டுச்சொந்தக்காரனுக்குக் கஷ்டமேற்படும்.

அக்ரீமெண்டுகளில் குறிப்பிடப்பட்ட கவ்யூனிட் சங்கியைக்குக் குறைவாக பெர்மிட்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அவை சம்பந்தமாக சாதாரணமாக வஜாக்கள் செய்யப்படுகிறதில்லை. பஞ்சாயத்துகளுக்கு அவைகளுடைய அச்சிரத்தையினால் இல்லாமலும் அவைகளின் நிர்வாஹ ஒழுங்குத் தப்பில்லாமலும் நஷ்டங்கள் ஏற்படும் பக்ஷத்தில் வஜாகொடுக்கிற விஷயம் அந்தந்த கேஸிற்கேற்று கவனிக்கப்படுமென்று கவர்மெண்டார் 1926-ம் வருஷத்தில் சட்டசபையில் கூறியிருக்கிறார்கள். அனேக பாபத்துகளில் பெர்மிட்கள் அக்ரீமெண்டுகளில் குறிப்பிடப்பட்ட ஸங்கியைகளுக்கு குறைவாகவே ஏற்படுகின்றன.

இன்னொரு விஷயம்: வட ஆர்காட்டு ஜில்லாவைச் சேர்ந்த காட்பாடி பாரெஸ்டுக்கு அடுத்தாப்போலவே சித்தூர் ஜில்லாவின் பாரெஸ்டு ஒன்றிருக்கிறது. சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்த பஞ்சாயத்து பாரெஸ்டு மேய்ச்சல்க் கட்டண விகிதங்கள் காட்பாடி பாரெஸ்டு விகிதங்களைவிடக் குறைவாகவிருக்கின்றன. ஆகவே, வட ஆர்காடு ஜனங்கள் காட்பாடி பாரெஸ்டில் பெர்மிட் வாங்குகிறதில்லை. சித்தூர் ஜில்லாப் பஞ்சாயத்திலும் இதர ஜில்லா ஜனங்களுக்கு பெர்மிட்கள் கொடுக்கப்படுகிறதில்லை. வட ஆர்காட்டு பஞ்சாயத்திலும் கவ் யூனிட்கள் அக்ரீமெண்டு சங்கியைப்படி மேய்கிறதில்லை. ஆகவே காட்பாடி பஞசாயத்துக்கு வஜா கொடுக்கப்பட வேண்டும். சித்தூர் ஜில்லா பஞ்சாயத்திலும் அக்ரீமெண்டு சங்கியைப்படி மாடுகள் பேயக் கூடுகிறதில்லை, மேலும் இரண்டு பஞ்சாயத்துகளுக்கும் மேய்ச்சல் கட்டண விகிதங்கள் ஒரே மாதிரியாகவே இருக்கவேண்டும். சில விடங்களில் கவர்மெண்டு பாரெஸ்டுகளிலுள்ள மேய்ச்சல் விகிதங்கள் அதே இடங்களிலுள்ள பஞ்சாயத்துக்காடுகளின் விகிதங்களுக்குக் குறைவாகவேயிருக்கின்றன. ஆகவே, பஞ்சாயத்துக் காடுகளின் மேய்ச்சல் விகிதங்களும் கவர்மெண்டு பாரெஸ்டு விகிதங்கள் ஒரே மாதிரியாகவே இருக்கவேண்டும்.

பஞ்சாயத்துகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற தீர்வைகள் அதிகமாகவிருக்கின்றனவென்று எங்கும் கூக்குறலாயிருக்கிறது. பாரெஸ்டு கம்மிட்டியார் மொழிந்தப்படி கவர்மெண்டார் காடுகளின் அபிவிருத்தியை நோக்கமாகக்கொள்ள வேணுமே ஒழிய பஞ்சாயத்துக்காடுகளிலிருந்து லாபத்தை



அடைய உத்தேசிக்கக்கூடாது. அஸ்ஸெஸ்மெண்டுகள் குறைக்கப் பட்டால் தான் பஞ்சாயத்தார் பஞ்சாயத்து அபிவிருத்தி முயர்ச்சிகளைக் கைக்கொள்ளக் கூடும். கவர்மெண்டார் நமது மாஹாணப பாரெஸ்டு பஞ்சாயத்துகளிலிருந்து 2 லக்ஷ ரூபாய்களுக்கு அதிகமான லாபத்தை அடைகிறார்கள்.

தற்போதில் தீர்வைகள் சில இடங்களில் மூன்று வருஷத்திற்கு ஒரு தடவையிலுமசில இடங்களில் வருஷா வருஷமும் நிர்ணயிக்கப் படுகின்றன நீண்டக்காலத்தக்கு அதாவது 10, 15 வருஷத்திற்கு ஒரே தடவையாக தீர்வைகள் நிர்ணயிக்கப்பட்டால்தான் பஞ்சாயத்துகளுக்கு அபிவிருத்தி வேலைகளைக் கைக்கொள்ள தைரியம் ஏற்படும். இப்போது இருக்கிற ஏற்பாட்டில் அவைகள் அபிவிருத்தி முயர்ச்சிகளைக் கைக்கொள்ளக் கூடுகிறதில்லை.

தற்போதில் அஸஸஸ்மெண்டுகள் குத்தகை வருஷத்தின் ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட வேண்டியிருக்கின்றன. வருஷ ஆரம்பத்தில் பஞ்சாயததுகளிடத்தில் பணம் இருக்காது. ஆகையால் பஞ்சாயத்தார்கள் தங்களுடய சொந்த பணத்தைக் கொடுத்துதவ வேண்டியிருக்கிறது. இவ்வித நிர்பந்தத்தைக் கவர்மெண்டார் சம்பளமில்லாமலுழைக்கிற பஞ்சாயத்தார்களுக்கு வைக்கக்கூடாது. ஆகவே குத்தகைப் பணத்தைச் செலுத்துகிற விஷயத்தில் பஞ்சாயத்துகளுக்கு அதை குத்தகை வருஷம் முடிவாகிறதற்கு முன் 4 தவணைகளில் கொடுக்கும்படியான சௌகரியம் ஏற்படவேண்டும்.

## நெல் வயல்களின் வரப்புகளில் வளர்கிற விசுவாமித்ர புல்லை எப்படி அழிப்பது?

நெல் வயல்களின் வரப்புகளில் விசுவாமித்ர புல்லானது பெரும்பாலும் காணப்படுகின்றது. அப்புல்லுகளின் கூரான இலைநுணிகள் முள்ளைப்போல் காலைக்குத்துவது தெரிந்த விஷயமே. இப்புல்லிற்கு பூமிக்கு அடியிலேனும் கிழங்கைப் போன்ற வேர்கள் இருப்பதினால் சாச்வதமாக வளரக்கூடிய சக்தி உண்டு. சாதாரணமாகக் குடியானவர்கள் இப்புல்லை அழிப்பதற்காக வறப்புகளை வெட்டி புது வறப்புகள் வைப்பது வழக்கம். ஆனால் அப்படி வெட்டுவதினால் இப்புல் அழியப்படுவதில்லை. ஏனெனில் அதன் கிழங்கு வேர்கள் வெட்டுப்பட்டாலும் மறுபடியும் வளரக்கூடியவை.

வரப்பின் பக்கங்களில் இப்புல்லானது அண்டை வெட்டுவதில் சாதாரணமாக அழிந்துபோய் விடுகிறது. ஆனால் வறப்பின்மேல் அழிவதில்லை. வறப்புகளின்மேல் இப்புல்லை அழிப்பதற்கு ஆடுதுரை விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் அநுசரிக்கப்பட்ட ஒரு உபாயத்தைக் கீழே சொல்லுவோம். இதனால் குடியானவர்கள் அவ்வுபாயத்தை அறிந்து சௌகரியம் அடைவார்கள் என்று நம்புகிறோம்.

ஒவ்வொரு வரப்பின் மேலும் அதின் நீளம் முழுதிலும் 6 அல்லது 9 அங்குல உயரத்திற்கு நெல்பதர் அல்லது உமியைப் பரப்பிவிட வேண்டியது. இப்படிப் பதர் அல்லது உமியைப் பரப்புவது காற்று, மழை யில்லாத நாளில் செய்வது உசிதம். பரப்பப்பட்ட உமியின்மேல் தகதக வென்று கனிந்து கொண்டிருக்கும் தணல்களை 2 அடி அல்லது 3 அடி தூரத்திற்கு ஒவ்வொன்று போடவேண்டும். அதனால் அந்த உமியானது கொஞ்சம் கொஞ்சமாக எறிய ஆரம்பித்து முழுவதிலும் கருகுவதற்கு நெடு நேரமாகும். கொஞ்சம் கொஞ்சமாக உமிஎறிந்து வருவதினால் வரப்பின் மேல்பாகம் நன்றாகச் சுடப்பட்டு அதற்கு அடியிலிருக்கும் விசுவாமித்ரப் புல்லின் கிழங்கு வேர்களும் அற்றுப் போகின்றன. இப்படியே ஒவ்வொரு வரப்பிலும் செய்தால் அநேகமாக இப்புல் அற்றுவிடும் என்பது அதற்கு அடுத்த வருஷத்தில் அப்புல் இல்லாமையினால் நன்கு விளங்கும்.

K. Venkataraman M. A.
சூப்பிரண்டண்டு,
விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, ஆடுதுறை.

## Correspondence.

1930ளு மேமீ 5உ திங்கள்கிழமை பாரஸ்ட் பஞ்சாயத்தின் அநீத அதிகார எலக்ஷன்.

திரிச்சிநப்பள்ளி ஜில்லா பாரஸ்ட் பஞ்சாயத்து டெப்டி தாசீல்தார் ம-அ-அ-ஸ்ரீ ஜோப் துரையவர்கள் பெரம்பலூர் தாலூக்கா குரும்பலூர் பாரஸ்ட் பஞ்சாயத்து சபையார் காலாவதி 30-6-30உ யோடு முடிவதாயும் அதற்கு 5-5-30உ மாலை 3 மணிக்கு ஷை ஊர் போர்டு பாடசாலை கட்டிடத்தில் எலக்ஷன் நடத்தப் போவதாய் காலை 9 மணிக்கு டாம்டாம் போட்டதை முன்னிட்டு பிரபல மிராசுதாரர்களும் தேர்ந்தெடுக்கும் ஓட்டர்களாகிய பொது ஜனங்களும் சுமார் 150 பேர்களும் கூடியிருந்தார்கள், டாம்டாம் ஷை டயத்தில் போடும் போதே வெள்ளாடு யில்லாத மெம்பர்களும் யோக்கியதாம்சம் பெற்றவர்களு மாகியவர்களை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தெருவிக்கப்பட்டது. மேலே கண்ட கட்டிடத்தில் கிஸ்து ரூ. 100, 200 செலுத்தும் மிராசிதாரர்களும் வந்திருந்தார்கள் அப்படி சேர்ந்துள்ள கட்டிடத்தில் எலக்ஷன் ரூல்படி பொது ஜனங்களால் அபேக்ஷகர்களை தேர்ந்தெடுத்து குணதோஷம் கண்டு நிவர்த்திசெய்து எலக்ஷன் செய்யவேண்டியிருக்க பஞ்சாயச் மெம்பர் என்பதர்க்கு யோக்கியதையில்லாத சிலர் பழய மெம்பரை ஷை கூட்டத்தில் விசாரித்தபொழுது படிக்கத்தெரியாது என்று சொன்னவரையும் வெள்ளாடு வைத்துக்கொண்டு இருப்பவரை 30 நாளையில் விற்றுவிடு என்று அவரையே மெம்பராகத்தானே குறித்துக்கொண்டு பிரசிடெண்டு



யாரை வைப்பது என்று கேட்டபோது பிரபல மிராசுதாரகள் ஆக்ஷேபணை செய்து புதிய மெம்பர்களை வைக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டும் என்னுடைய அபிப்பிராயப்படிதான் செய்வேன் என்றும் அழுத்தமாக டெப்டி தாசில்தார் அவர்கள் சொல்லிவிட்டார். சொந்த அபிப்பிராயம் என்பது பெரிய உத்தியோக ஸ்தானங்களுக்கும் கௌரவ உத்தியோக ஸ்தானங்களுக்கும் ஏற்பட்டிருக்கிறதென்று கேழ்வி பட்டிருக்கிறோம். எவ்வித நியாய மில்லாது அநீதத்திலும் வழங்கப்படுகிறது. இவ்வித அநீதிகளை ம-அ-அ-ஸ்ரீ பாரஸ்டு பஞ்சாயத்து ஆபீசர் அவர்களும் ம-அ-அ-ஸ்ரீ திரிச்சி ஜில்லா கலெக்டர் துரை அவர்களும் கவனித்து இதை கண்டிப்பார்களென்று நம்புகிறோம்.

பவு. தை. ந. பெ. ராமலிங்கபடையாச்சியார்.
7-5-30

## பாரெஸ்டு பஞ்சாயத்தார்களுக்கு வெகு அவஸர அறிக்கை.

ஏற்கனவே நடைபெறப் போகிற பாரெஸ்டு பஞ்சாயத்தார் மஹாநாட்டின் ஸம்பந்தமாக ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறோம். நடைபெறப் போகிற மஹாநாடானது எல்லா மஹாநாடுகளையும் விட வெகு முக்கியமானதென்றும் அதில் தான் நமது இயக்கத்தின் வாழ்வும், நமது யூனியனின் வாழ்வும் நிர்ணயிக்கப படப்போகின்றனவென்றும் கூறியிருக்கிறோம். அது காரணம்பற்றியே தான் நமது மாஹாணத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்தாரும் தவராமல் அந்த மஹாநாட்டிற்கு வந்து தக்க தீர்மானங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்பவும் இன்னொருதடவையும் அவர்களை மஹாநாட்டிற்குத் தவராமல் வரும்படி கேட்டுக்கொள்கிறோம். பஞ்சாயத்தார்கள நமது இயக்கத்தின் சம்பந்தமாக இன்னும் அதிக சிரத்தையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம் நமது இயக்கம் நமது தேசாபிவிருத்திக்கு வெகுமுக்கியமானது. மாடுகளுக்கு மேய்ச்சல் வஸதிகளையும் பிரஜைகளுக்கு விறகு, எருத்தழை துருக்கல் கருங்கல், வீடுகட்ட, மாட்டுக் கொட்டில்கட்ட மரஙகள், மருந்து மூலிகைகள், தேன் இவைகளை நமது கிராமக்காடுகள் கொடுக்கின்றன. பட்டணத்தில் வசிக்கிற ஜனங்கள் இவைகளை அதிக விலைகளைக் கொடுத்து வாங்க வேண்டியதாக விருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. கிராமங்களில் பிரஜைகளுக்கு மேற்கூறிய வகைகளில் அதிக சௌகரியம் இருந்துவருகிறது. பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம் அழிந்து போகுமானால் நமது ஜனத்தொகையிலேயே முக்கால் பங்காக அமைந்திருக்கும் மேற்கூறிய கிராமப்பிரஜைகளுக்கு க்ஷேமக்குறைவு வரும், தரித்திரமும் ஏற்படும். ஆகவே பாரெஸ்டு பஞ்சாயத்துகளை அழியாமல் வைக்கவேண்டியது பிரதி பஞ்சாயத்தாரின் கடமையாகும். அவை அழிந்து போனால் அந்தப்பாபம் பஞ்சாயத்தார்

144325



களையே சேரும். வருகிற மஹாநாட்டில்தான் பஞ்சாயத்தார்கள் நமது இயக்கத்தை வலுக்கச்செய்வதற்கான தீர்மானங்களைக் கைக்கொள்ள வேண்டும். ஆகவே, எல்லாப்பஞ்சாயத்தார்களும் ஒருவர் கூடத்தவராமல் வந்து சேரவேண்டும். 1930௵ செப்டம்பர் மாதம் 21௳ மஹாநாடு நடைபெறும் இது விஷயமாகப் பஞ்சாயத்தார்களுக்கு இன்னொரு அறிக்கை வரும். கனம் ராம்தாஸ் பந்துலு அவர்கள் அக்ராஸனம் வஹிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். கனம் ராம்தாஸ் பந்துலு நமது சிறந்த தேசாபிமானிகளில் ஒருவர். அவர் கூட்டுறவு விஷயங்களிலும், தேசாபிவிருத்தி விஷயங்களிலும் அதிக அனுபவமுள்ளவர். நமது பத்திரிகையாகிய "ரூரல் இந்தியா"வில் அவருடைய சிறந்த வியாஸங்கள் பிரஸுரிக்கப்பட்டிருக்கின்றன. போர்டு மெம்பராகிய மிஸ்டர் எச்சு. எ. பி. வேர்னன் ஐ. சீ. எஸ்., சீ. எஸ். ஐ., சீ. ஐ. ஈ. அவர்கள் வெருசாய் மஹாநாட்டைத் திறப்பார். மிஸ்டர் வெர்னன் வெகுகாலமாக பாரெஸ்டு பஞ்சாயத்துவிஷய போர்டு மெம்பராக விருந்துவருகிறார். அவர் நமது இயக்கத்தின் அபிவிருத்திக்காக ரொம்பவும் உழைத்து வருகிறார், தவிரவும், இப்பொழுது கவர்மெண்டாரின் ஆலோசனையிலிருக்கிற பாரெஸ்டு பஞ்சாயத்து ஸ்டாண்டிங்கு ஆர்டரும் முக்கியமாய் அவராலேயே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்தார்களுக்கு அவர் தக்க புத்திமதிகளை உரைப்பார். ஆகையால் பஞ்சாயத்தார்கள் ஒருவர்கூட தவராமல மஹாநாட்டிற்கு விஜயம்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெகு பஞ்சாயத்துகள் கன்பரன்சு டொனேஷன்களை இன்னமும் அனுப்பாமல் இருக்கிறார்கள். அவைகள் இந்த அறிக்கையைப் பார்த்தவுடன் டொனேஷன்களை அனுப்பிவிட வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இது விஷயத்தில் தாமதமேகூடாது. தாமதமேற்பட்டால் கன்பரன்சு ஏற்பாடுகளுக்குச் செலவுக்குப் பணமில்லாமல் கஷ்டமேற்படும்.

---

## சென்னை கிராம பஞ்சாயத்து புல்லடீன்.

கவர்மெண்டார் கிராமப்பஞ்சாயத்து புல்லடீனைப் பிரசுரிப்பதை நிருத்திவிட்டார்கள். எக்காரணம்பற்றி அவர்கள் அப்படிச் செய்தார்களோ நமக்குத்தெரியவில்லை, கிராமப் பஞ்சாயத்துகளுக்கும், கிராம ஜனங்களுக்கும், கிராம பள்ளிக்கூடங்களுக்கும் லைப்ரரிகளுக்கும், ரீடிங்கு ரூம்களுக்கும மேற்கூறிய பத்திரிகை வெகுஉபயோகமாக விருந்தது. மேலும், நமதுபத்திரிகையாகிய ரூரல் இந்தியாவைப்போலவே அதுவும கிராமாபிவிருத்தியின் பொருட்டும் பிரஜாக்ஷேமத்தின் பொருட்டும் உழைத்துவந்திருக்கிறது, அதுநின்றுபோனதைப்பற்றி நாம் ரொம்பவும் விசனிக்கிறோம.

ஆனபோதிலும் நமது "ரூரல் இந்தியா" பத்திரிகையில் கிராம பஞ்சாயத்து புல்லடீன் விஷயங்களை அதிகமாக எழுத உத்தேசித்திருக்கிறோம். கிராம பஞ்சாயத்து புல்லடீனில் பிரசுரமாகிவந்த வகை விஷயங்கள் எல்லாம் நமது பத்திரிகையில் இனிமேல் பிரசுரிக்கப்படும். ஏற்கனவே நமது பத்திரிகையில் எழுதப்பட்டுவந்த கிராம பஞ்சாயத்து விஷய வியாஸங்களைச் சந்தாநேயர்கள் படித்துவந்திருப்பார்கள், திருப்தியையும் அடைந்திருப்பார்கள். கிராம பஞ்சாயத்துகளும், லோகல் போர்டுகளும் கிராமங்களிலுள்ள இதர பிரபுக்களும், ஸர்க்கார் கல்வி இலாகாவும் நமது பத்திரிகையை ஆதரிக்க வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# மேயர்ஸ் பம்புகள்.

உலகப் பிரசித்தி பெற்றவை.




எவ்வளவு ஆழத்திலும் சுலபமாக
வேலை செய்யக் கூடிய கை பம்புகளும்,
நிலம் பாய்ச்சவும் அதிக தண்ணீர் ஸப்ளை
செய்யவும் கூடிய பெரிய பம்புகளும்,
ஜலம் தெளிக்கக் கூடிய பம்புகளும்,
சுலபமாக எடுத்துக் கொண்டு போகக் கூடிய
பம்புகளும்
நம்மிடம் கிடைக்கும்.

## லிமாயீ பிரதர்ஸ் லிமிடெட்,

1-173 பிராட்வே: தபால் பெட்டி 202: மதராஸ்.

Regd. No. M 2475. JULY, 1930. Vol. V—No. 7.


# அம்ருதாஞ்சனம்

என்றாலென்ன?

தலை நோய், பக்க நோய், கீல் நோய்.

கன்ன நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலசங்கை,

சுளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம், சைத்யம்,

சளுப்பு, மார்சளி,




உப்பசம், மார் மூச்சு,

கழுத்து சளி, ரத்தம் விழுதல்,

சந்திவாய்வு, சீழ் விழுதல்,

சுண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்,

நோய், செகப்பு, தத்துக்கள், படை,

சிறங்கு, தெனவு, எரிச்சல், இது

அது என்று சொல்வதேன் ?

எல்லா நோய்களையும்,

பாதைகளையும்,

'பாக்கும் ! போக்கும் !! போக்கும் !!!

மூன்று விசைகளிலும் போக்கும்.

## அமிர்தாஞ்சனம் டிபோ

ம்பாய் மதராஸ்.


ublished by Mr. *A. Rajagopal Reddi*, President, Forest Panchayatdars' Union Ltd. Madras. *Printed AT THE MAGAZINE PRESS, CHINGLEPUT.*